# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2568/SCIC/2023**

திருமதி.ம.வசந்தமலர், க/பெ.மதியழகன்
காலகம் - அஞ்சல் — புகார்தாரர்
பேராவூரணி வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் -614 804.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பட்டுக்கோட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 28.11.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.12.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 14.01.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 08.02.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 12.07.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 18.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பட்டுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள்- பேராவூரணி சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.1319/2015 மற்றும் 1821/2015 மோசடியாக

பதியப்பட்ட ஆவணத்தை ரத்து செய்யக் கோரி புகார் மனு அளித்தல் - தொடர்பாக - சார்பதிவாளர் ஆவண எண்.1319/2015 மற்றும் 1821/2015 மோசடியாக பதியப்பட்ட ஆவணம் என்று பதிவுத்துறை சமுதாயத்திற்க பல மனு போட்டுள்ளேன். மேற்படி மனு மோசடி என்று ஆனால் இம்மனு பதிவுச் சட்டப் பிரிவு 68(2)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு தகுந்த பதிலை உரிய கால வரையறைக்குள் வழங்க உயர் அதிகாரிகள் ஆணை இட்டும் வட, பொருந்தாத பதிலை வழங்க விதித்த அரசியல் அமைப்பு சட்டப்பிரிவு விதி பற்றிய தகவல் வழங்கவும். மேலும் எண்.3186/ஆ1/2021 நாள் 10.11.2021 மனுவில் மோசடிப் பத்திரம் என்று புகார் கொடுத்துள்ளேன். இதை விசாரிக்காமல் இம்மனுவை தள்ளுபடி செய்ய எந்த அதிகார அமைப்பு விதி கூறுகின்றது அப்படி இருப்பின் சட்டவிதியை தகவலாக தர வேண்டுகிறேன்" என்பன போன்று 12 (பன்னிரெண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரருடன் அவரது கணவர் திரு.மதியழகன் என்பவரும் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு ப.சுரேஷ்பாபு, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜரானார். மனுதாரர், 2 ஆவண எண்களைக் குறிப்பிட்டு தெரிவித்து, அவை மோசடியாக பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அதனை இரத்து செய்ய வேண்டுமென கோரியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், ஏற்கெனவே 08/12/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாக, மனுதாரரின் கோரிக்கை குறித்து விசாரணை மேற்கொள்ள, நாள் மற்றும் நேரம் குறிப்பிட்டு தெரிவித்து அனுப்பியுள்ளார். மேலும், 08/02/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய கடிதத்தில், பதிவுத்துறை சட்டம், பிரிவு 77(A)-ன் கீழ் விசாரணையில் உள்ளதாகவும், அவ்விசாரணை நிறைவு பெற்றவுடன் ஆணை பிறப்பித்து அனுப்பப்படும் என தகவல் தெரிவித்துள்ளார். இறுதியாக, பொதுத் தகவல் அலுவலர், 11/11/2024 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தில் உயர்நீதிமன்றம் பிரிவு 77(A) ஐ தற்போது நிறுத்தி வைத்துள்ளதால், மாவட்டப் பதிவாளருக்கு வழங்கப்பட்ட மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை இரத்து செய்யும் அதிகாரம், தற்போது இல்லை எனத் தெரிவித்துள்ளார். மனுதாரரும் மேற்குறிப்பிட்ட தகவல்கள் தனக்கு வரப்பெற்றுள்ளதாக ஒப்புதல் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களை ஆணையம் பதிவு செய்து, ஏற்கிறது. மனுதாரர், தனது மனுவின் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ள காவல்துறையினை அணுகுமாறு ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது. மனுதாரருக்கு உரிய கால வரம்பிற்குள், பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என ஆணையம் முடிவு செய்கிறது. இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2568/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
பட்டுக்கோட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

**புகார்தாரர்**

திருமதி.ம.வசந்தமலர், க/பெ.மதியழகன்
காலகம் - அஞ்சல்
பேராவூரணி வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் -614 804.

RG/PC